# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,*
## உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 48.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

## 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[*2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது*]

*ச.வ.–ஓ. 12/2011*

### 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2011ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். *சுருக்கப்பெயர்.*

2. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறானதும் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:- *2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (ii)ஆம் உட்பந்தியில் "(அத்தகைய நிதியத்துக்கு ஊழியர் ஒருவர் செலுத்திய உதவுதொகைகளைக் குறிக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய இளைப்பாறுகை 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் இடம்பெற்றிருக்குமிடத்து, (அத்தகைய நிதியத்துக்கு ஊழியர் ஒருவர் செலுத்திய உதவுதொகைகளைக் குறிக்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அதன் (iii) (ஆ) ஆம் உட்பந்தியில் "எவரேனும் ஊழியருக்குக் கொடுக்கப்பட்ட பணத்தொகை;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

"எவரேனும் ஊழியருக்கு, அத்தகைய ஊழியர் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் தொழிலிலிருந்து இளைப்பாறுமிடத்து, கொடுக்கப்பட்ட பணத்தொகை;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

"(1) அப்பிரிவுக்கான (ஆ) என்னும் பந்தியில், அப் பந்திக்கான (LX) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(LXi) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிச் சபையின் இலாபங்களும் வருமானமும்.".

(2) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "உள்ள அத்தரும நிறுவனத்தின் இலாபங்களும் வருமானமும்"; என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் திரளுகின்ற அத்தரும நிறுவனத்தின் இலாபங்களும் வருமானமும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஏ) 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அல்லது அத்தகைய பதிவுக்கு ஏற்பாடுசெய்து மாகாண சபையொன்றினால் சட்டமாக்கப்பட்ட முறையான நியதிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தின் இலாபங்களும் வருமானமும் அத்துடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட லக் சதொச லிமிற்றெட்டின் இலாபங்களும் வருமானமும்;";

(4) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் "அப்பிவெனுவென் அப்பி நிதியத்தின் இலாபங்களும் வருமானமும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அப்பிவெனுவென் அப்பி நிதியத்தின் இலாபங்களும் வருமானமும்;", என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஒ) (i) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிற்றெட்;

(ii) மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிற்றெற், என்பவற்றின் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற பத்தாண்டுக் காலப் பகுதியினுள்ளான வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்குமான இலாபங்களும் வருமானமும்;

(ஓ) (i) இலங்கை மின்சார சபை;

(ii) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை;

(iii) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்;

(iv) இலங்கைத் துறைமுக அதிகார சபை,

என்பவற்றின் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குள்ளான வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்குமான இலாபங்களும் வருமானமும்,

அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான, விடயத்துக்கேற்ப, அத்தகைய சபையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதிகாரசபையின் மொத்த இலாபங்களின் இருபத்தைந்து சதவீதம் அரசாங்கத்துக்குப் பங்கிலாபமாகச் செலுத்தப்பட்டிருப்பின்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு அதன் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "அத்துடன் திரளும் ஏதேனும் நன்மையின் பெறுமதி." என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் திரளும் எவையேனும் நன்மைகளின் பெறுமதி." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில் "ஈட்டப்பட்ட வேதனாதிகள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஈட்டப்பட்ட வேதனாதிகள்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(ண) வாடகையின்றி அல்லது அத்தகைய இடத்தின் வாடகைப் பெறுமதிக்குக் குறைந்தவொரு வாடகையில், (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தனியாளுக்கு வழங்கப்பட்ட ஒரு வதிவிடத்தின் வாடகைப் பெறுமதி;

(த) ஆகக்கூடிய தொகை பஞ்சாங்க மாதமொன்றிற்கு ஐம்பதாயிரம் ரூபாவுக்கமைவாக, ஒன்றில் தொழில்தருநரினால் வழங்கப்பட்ட ஒரு மோட்டார் வாகனத்தின் தனிப்பட்ட பாவனையிலிருந்தான நன்மையின் பெறுமதி அல்லது அத்தகைய வாகனத்தை வழங்குவதற்குப் பதிலாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் படி;

(ந) நான்காம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இலாபங்கள் தவிர, இலங்கைப் பிரசையொருவராகவிருக்கின்ற அல்லது இலங்கையில் வதிவுள்ளவரான எவரேனும் தனியாளுக்கு தொழிலிலிருந்தான இலாபங்கள் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து, அப்போது -

(i) ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியதாகவுள்ள அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகம்; அல்லது

(ii) ஒரு இலட்சம் ரூபா,

இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ, அது;

(ப) அத்தகைய தனியாளினால் அளிக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட அவசரகால அல்லது முன்னுரிமைச் சேவைகளுக்காக அல்லது ஏதேனும் விசேட பணிக்காக (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் தனியாளுக்கு அல்லது பதவி வகிப்பவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் விசேட கொடுப்பனவு;

(ம) இலங்கையில் நடாத்தப்பட்ட ஏதேனும் சர்வதேச நிகழ்ச்சியில் பங்குபற்றுவதிலிருந்து வதி வற்றவரான எவரேனும் தனியாளுக்கு இலங்கையில் எழுகின்ற அலுவலக முறையான வேதனாதிகள் ;

(ய) இலங்கைப் பிரசையொருவராகவில்லாதவரும் மற்றும் இலங்கையில் வதிவற்றவருமான எவரே னும் தனியாளுக்கு இலங்கையிலிருந்து எழுகின்ற அலுவலக ரீதியான வேதனாதிகளின் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்.".

**5**. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "எவரேனும் தனியாளுக்கு, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் திரளுகின்ற அல்லது எழுகின்ற இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததாகவுள்ள ஏதேனும் வட்டியின் அத்தகைய பாகமும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் தனியாளுக்கு –

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகத் திரளுகின்ற அல்லது அவ்வாண்டில் எழுகின்ற இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத ; அத்துடன்

(ii) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக திரளுகின்ற அல்லது அவ்வாண்டில் எழுகின்ற ஐந்து இலட்சம் ரூபாவை

விஞ்சாததாகவுள்ள ஏதேனும் வட்டியின் அத்தகைய பாகமும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

6. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் "ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில்;", என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "ஏதேனும் கரைகடந்த வியாபாரம் தொடர்பில்," என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

"ஏதேனும் கரைகடந்த வியாபாரம் தொடர்பில்; அத்துடன்

(iii) அனுப்பும் பொருட்டொகுதி என்ற அடிப்படையின் மீது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டவையும் சந்தைக்கு ஆயத்தஞ்செய்வதில் எவையேனும் பண்டங்களை மீளப்பொதியிடுதல் அல்லது அவற்றுக்குச் சுட்டுத்துண்டிடுதல் தவிர, அத்த கைய பண்டங்களை ஏதேனும் பதனிடுகைக்கு அல்லது உற்பத்திக்கு உட்படுத்தாமல் மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றவை யுமான அத்தகைய பண்டங்களாகவுள்ள, எவையேனும் பண்டங்களை ஏற்றுமதி செய்தல் என்ற தொழில் தொடர்பில்.";

(3) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஆஆ) முகாமை, நிதி, வழங்கல் தொடர்ச்சி மற்றும் பட்டியலிடுகை என்பவற்றுக்காக இலங்கை யில் தனது தலைமையலுவலகத்தைத் தாபித் துள்ள எவரேனும் வெளிநாட்டு வாங்குநருக்கு அளிக்கப்பட்ட வழங்கல்களிலிருந்து, புடவை, தோல் உற்பத்திப் பொருட்கள், பாதணிகள் அல்லது பைகள் என்பவற்றின் எவரேனும் உற்பத்தியாளரினால் வெளிநாட்டு நாணயத் தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமான மும்;";

(4) அப்பிரிவின் (ஈஈஈ) என்னும் பந்தியில் "இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே" என்னும் சொற்களி லிருந்து தொடங்கி "ஆற்றப்பட்ட சேவைகளிலிருந்து" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே, இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் பங்காண்மைக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் சேவையிலிருந்து, இலங்கையில் அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் சேவைக்கான ஏதேனும் தரகு, கழிப்பனவு அல்லது இதையொத்த பெறுகை தவிர இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்காண் மைக்கு ஆற்றப்பட்ட ஏதேனும் சேவையிலிருந்து," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(5) அப்பிரிவின் (ரரரரர) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ரரரரரர) (i) மத்தியவங்கியினால் விதிக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்கப் பேணப்பட்டுத் தொழிற்படுத்தப்பட்ட ஏதேனும் வங்கியின் அல்லது வேறு நிதி நிறுவனத்தின் முதலீட்டு நிதியக் கணக்கில் வரவுக்கிருக்கும் பணங் களிலிருந்து வழங்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் அத்தகைய வங்கிக்கு அல்லது வேறு நிதி நிறுவனத்துக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டிக்குச் சமமான தொகையொன்று; அல்லது

(ii) (அ) 17இ என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்புமுயற்சி யொன்றில் முழுமையாக முதலீடு செய்வதற்காக, ஏதேனும் கம்பெனிக்கு ; அல்லது

(ஆ) மீளத் திறக்கப்பட்ட கைவிடப் பட்ட தொழிற்சாலையைத் தொழிற்படுத்துவதற்காக, அதில் முழுமையாக முதலீடு செய்வதற்காக எவரேனு மாளுக்கு அல்லது பங்காண் மைக்கு,

வழங்கப்பட்ட ஏதேனும் கடன்தொடர் பில், இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கிக்கு அல்லது வேறு நிதி நிறு வனத்துக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டிக்குச் சமமான தொகையொன்று;

இப்பந்தியில் "மீளத் திறக்கப்பட்ட கைவிடப்பட்ட தொழிற்சாலை" என்பது, ஏதேனும் வியாபாரப் பண்டத்தை அல்லது பொருளைத் தயாரிப்பதில் அல்லது உற்பத்திசெய்வதில் ஈடுபட்டி ருந்ததும், ஆனால், 2010, நவம்பர் 22ஆந் தேதிக்கு முற்போந்த மூன்றாண்டு களுக்குக் குறையாத தொடர்ச்சியான வொரு காலப்பகுதிக்கு அவ்வாறு ஈடுபட்டிராததும், 2012, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் வர்த்தகரீதியிலான அளவுகளில் அத்தகைய வியாபாரப் பண்டத்தின் அல்லது பொருளின் அல்லது வேறேதேனும் வியாபாரப் பண்டத்தின் அல்லது பொருளின் தயாரிப்பை அல்லது உற்பத்தியைத் தொடங்குகின்றதுமானவொரு தொழிற் சாலை என்று பொருளாகும்.";

(6) அப்பிரிவின் (லலல) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(லலலல) இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுக முடிவிடத்தின் தொழிற்பாட்டுக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனுமாளுக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற இலாபங்களும் வருமானமும் ; அத்துடன்

(லலலலல) இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்தில் அத்தகைய துறைமுகத்திற்குள் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும், தொழிலின்போது எவரேனும் ஆளினால் அல்லது பங்காண்மையினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவையிலிருந்து பெறப்பட்ட இலாபங்களும் வருமானமும்;", அத்துடன்

(7) அப்பிரிவின் (வவவவ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(வவவவவ) இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சியிலிருந்து எவரேனுமாளுக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற இலாபங்களும் வருமானமும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 16அ, 16ஆ மற்றும் 16இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் முறையே பிரிவு 16அ, பிரிவு 16ஆ மற்றும் பிரிவு 16இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஏதேனும் மீன்பிடிப் பொறுப்பு முயற்சியின் இலாபங் களையும் வருமானத் தையும் வருமானவரி யிலிருந்து விலக்களித்தல்.

16அ. (1) இலங்கையில் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் மீன்பிடிப்பதற்கான பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்தான எவையேனும் இலாபங் களும் வருமானமும் தவிர, 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலா பங்களும் வருமானமும், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஐந்தாண்டுக் காலப்பகுதியினுள்ளான ஒவ்வொரு வரிமதிப்பீட் டாண்டிற்கும் வருமானவரியிலிருந்து விலக்களிக் கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "மீன்பிடிப்பதற்கான பொறுப்பு முயற்சி" என்பது, சந்தைக்காக அத்தகைய உற்பத்திப்பொருளைத் தயார் செய்வதில் மீனைச் சுத்தமாக்குதல், அளவுபடுத்துதல், தரம்பிரித்தல், தரப்படுத்துதல், குளிரப்பண்ணுதல், நீரகற்றுதல், பொதியிடுதல், வெட்டுதல் அல்லது தகரத்தி லடைத்தல் என்பவற்றுக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சி யையும் உள்ளடக்கும்.

(3) மீன்பிடித்தலையும் ஏதேனும் உற்பத்திப் பொருளை உற்பத்திசெய்வதற்காக அத்தகைய மீனைப் பயன்படுத்துதலையும் கொண்டுள்ள வொரு பொறுப்புமுயற்சி தொடர்பாக, அத்தகைய மீன், அத்தகைய கருதப்பட்ட விற்பனையின் நேரத்தில் நிலவுகின்ற திறந்த சந்தை விலையில் அத்தகைய உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு, அத்தகைய கருதப்பட்ட விற்பனையின் அடிப்படை

யில் கணிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது அப்பொறுப்புமுயற்சிக்கு ஏற்புடையற்பாலதாத லும் வேண்டும்.''

*கமத்தொழில் விதைகளை அல்லது நடுகைப் பொருட்களை விளைவிக்கின்ற ஏதேனும் பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படுதல்*

16ஆ. (1) கமத்தொழில் விதைகளை அல்லது நடுகைப்பொருட்களை விளைவிப்பதற்கான, அல்லது அத்தகைய விதைகளின் அல்லது பொருட் களின் முதனிலைப் பதனிடுகைக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்தான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர, 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குள்ளான ஒவ்வொரு வரிமதிப்பீட் டாண்டிற்கும் வருமான வரியிலிருந்து விலக் களிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் ''முதனிலைப் பதனிடுகை'' என்பது, அத்தகைய விளைபொருளைச் சந்தைக்காகத் தயார் செய்யும் நோக்கத்துக்காகச் சுத்தமாக்குதல், அளவு படுத்துதல், தரம்பிரித்தல், தரப்படுத்துதல், குளிரப் பண்ணுதல், நீரகற்றுதல், வெட்டுதல், தகரத்திலடைத்தல் அல்லது பொதியிடுதல் என்று பொருளாகும்.

(3) கமத்தொழில் விதைகளை அல்லது நடுகைப்பொருட்களை விளைச்சல் செய்து, அத்தகைய விதைகளை அல்லது நடுகைப் பொருட் களைக் கமத்தொழிலில் அல்லது தோட்டப்பயிர்ச் செய்கையில் பயன்படுத்துவதனைக் கொண்டுள்ள வொரு பொறுப்பு முயற்சிதொடர்பாக; அத்தகைய

விளைபொருள், அத்தகைய கருதப்பட்ட விற்பனையின் நேரத்தில் நிலவுகின்ற திறந்த சந்தை விலையில் அத்தகைய நோக்கத்துக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு, அத்தகைய கருதப்பட்ட விற்பனையின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும்மீது அப்பொறுப்புமுயற்சிக்கு ஏற்புடையற்பாலதாதலும் வேண்டும்.

ஐம்பது மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் முதலீடு செய்கின்ற ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படுதல்.

16இ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டதும், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் எவரேனுமாளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால் கொண்டு நடாத்தப்படுவதுமான ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின் 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர), அத்தகைய பொறுப்புமுயற்சி எந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களிலிருந்து இலாபங்களை ஈட்டத்தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டு தொடங்குவதிலிருந்து, அல்லது பொறுப்புமுயற்சியானது எந்தத் தேதியன்று வர்த்தகத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தொடங்குகின்றதோ அந்தத் தேதியிலிருந்து கணிக்கப்பட இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றை அப்பொறுப்புமுயற்சி எவ்வரிமதிப்பீட்டாண்டில் பூர்த்திசெய்கின்றதோ அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டு தொடங்குவதிலிருந்து, எது முன்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக் காக, "புதிய பொறுப்புமுயற்சி" என்பது -

(அ) ஏதேனும் மதுபான அல்லது புகையிலை உற்பத்திப் பொருள் தவிர்ந்த ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளதும்;

(ஆ) 2010, நவம்பர் 22ஆந் தேதிக்குப் பின்னர், ஆனால் 2012, மார்ச்சு 31ஆந் தேதிக்குமுன்னர் நிலையான சொத்துக்களைக் கொள்ளுவதில் அதில் முதலீடுசெய்யப்பட்ட பணத்தொகை ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவிராததும்; அத்துடன்

(இ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்றதும்,

ஆன பொறுப்பு முயற்சியொன்று என்று பொருளாகும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், அதன் (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "முதலீடொன்றுடன் 2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "முதலீடொன்றுடன் 2002, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 17அ என்னும் புதிய பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்ப துடன், அது, அச்சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*எவையேனும் விதித்துரைக்கப் பட்ட செயற்பா டுகளில் ஈடுபட்டுள்ள ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படுதல்.*

17அ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டதும், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஏதேனும் கம்பெனியி னால் கொண்டு நடாத்தப்படுவதுமான அத்தகைய கம்பெனியின் 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வரு மானமும் (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங் களும் வருமானமும் தவிர), அத்தகைய பொறுப்பு முயற்சி எந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களிலிருந்து இலாபங்களை ஈட்டத்தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டு தொடங்குவதிலிருந்து, அல்லது பொறுப்பு முயற்சியானது எந்தத் தேதியன்று வர்த்தகத் தொழிற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்குத் தொடங்குகின்றதோ அந்தத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண் டாண்டுக் காலப்பகுதியொன்றை அத்தகைய பொறுப்பு முயற்சி எவ்வரிமதிப்பீட்டாண்டில் பூர்த்தி செய்கின்றதோ அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டு தொடங்கு வதிலிருந்து, எது முன்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து கணிக்கப்பட்ட ஐந்தாண்டுக் காலப் பகுதியொன்றுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய பொறுப்புமுயற்சியில் செய்யப்பட்ட முதலீட்டின் அளவு மூன்று மில்லியன் அமெரிக்கன் டொலருக்கு அதிகமான தாக அல்லது அதற்குச் சமமான வேறு நாணயத்தில் இருக்குமிடத்து, அமைச்சர், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு, அதே அடிப்படையில் ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு வரிவிலக் களிப்பை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக் காகப் "புதிய பொறுப்புமுயற்சி" என்பது, தேசியப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு, நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப்பட்டதென்று, அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதும் நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்ட மூன்று மில்லியன் அமெரிக்கன் டொலருக்குக் குறையாத அல்லது வேறு நாணயங்களில் அதற்குச் சமமான முதலீட்டைக் கொண்டிருக்க வேண்டியதுமானவொரு பொறுப்புமுயற்சி என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "2009, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2010, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "2009, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2010, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11**. இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "2009, மார்ச்சு 31ஆம் தேதிக்குப் பிந்தாத" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2010, மார்ச்சு 31ஆம் தேதிக்குப் பிந்தாத" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "2009, மார்ச்சு 31ஆம் தேதிக்குப் பிந்தாதவொரு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2010, மார்ச்சு 31ஆம் தேதிக்குப் பிந்தாதவொரு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13**. இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான மேலதிகக் காப்புவாசகத்தில் ''மூன்றாண்டுகளாதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

''மூன்றாண்டுகளாதல் வேண்டும் :

ஆயின், மேலும், ஏதேனும் முயற்சி மூலதனக் கம்பெனி, (1)ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் சாதாரணப் பங்குகளைக் கொள்வனவுசெய்வதற்காக 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் ஏதேனும் முதலீட்டைச் செய்திராதவிடத்து, அத்தகைய கம்பெனி, இப்பிரிவின் கீழ் ஏதேனும் வரிவிலக்களிப்புக்கு உரித்துடைய தாதலாகாது." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14**. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் -

(அ) அதன் (iii)ஆம் உட்பந்தியில், "அத்துடன் (v) ஆம் பந்தியில்" என்னும் சொற்களிலிருந்து அதன் முடிவுரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

''அத்துடன் (iv)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதியைத் தவிர –

(அ) அத்தகைய ஆளினால் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்ட அல்லது பொருத்தி உருவாக்கப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதியின் கொள்ளுதலின் அல்லது பொருத்தி உருவாக்கலின் செலவின் மீது ஆண்டொன்றுக்குப் பன்னிரெண்டரை சதவீதப்படி; அல்லது

(ஆ) அத்தகைய ஆளினால் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியில் அல்லது அதற்குப் பின்னர் கொள்ளப்பட்ட அல்லது பொருத்தி உருவாக்கப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதியின் கொள்ளுதலின் அல்லது பொருத்தி உருவாக்கலின் செலவின்மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தி மூன்றொடு மூன்றிலொரு சதவீதப்படி;'';

(ஆ) அப்பந்தியின் (v)ஆம் உட்பந்தியில் "நிர்மாணிக்கப்பட்டதுமான கொள்ளப்பட்ட ஏதேனும் தகைமைபெற்ற கட்டிடம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் நிர்மாணிக்கப்பட்டதுமான கொள்ளப்பட்ட ஏதேனும் தகைமைபெற்ற கட்டிடம்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (v)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(vi) *2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் தகைமைபெற்ற கட்டிடத்தின் நிர்மாணச் செலவின்மீது பத்துச் சதவீதப்படி:";*

*(ஈ) அப்பந்திக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் -*

(i) *உட்பந்தி* (i) *இல், "கொள்ளப்பட்ட ஏதேனும் பொறித் தொகுதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்*

(ii) *உட்பந்தி* (ii)*இல், "2007, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கொள்ளப் பட்டதும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2007, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல் லது அதன்பின்னர், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;*

*(2) அப்பிரிவின் (ஐ) ஆம் பந்தியில் "கொண்டு நடாத்துவதில் அத்தகைய ஆளினால் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட மூலதனச் செலவு உட்பட்ட செலவினம்;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-*

"கொண்டு நடாத்துவதில் -

(i) *2011*, ஏப்பிறல் *1*ஆந் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண் டுக்காக அத்தகைய ஆளினால் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட மூலதனச் செலவினம் உட்பட்ட செலவினம்; அல்லது

(ii) *2011*, ஏப்பிறல் *1*ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய ஆளினால் உறப்பட்டதும், மூலதனச் செலவின முட்பட்டதுமான செலவினத்தின் இருநூறு சதவீதத்துக்குச் சமமானவொரு தொகை;";

*(3)* அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியில் "ஒத்திசைவுச் செலவுகள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒத்திசைவுச் செலவுகள்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

*(4)* அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(த) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் ஏதேனும் அலுவலகமுறையான நிரலில் ஒரு கம்பெனியின் எவையேனும் பங்குகளுக்கு விலைகூறல் பட்டியலிடலில் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் உறப்பட்ட ஏதேனும் செல வினம்; ஆயின், அவ்வரிமதிப்பீட்டாண்டிலும் முன்னைய ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலும் உறப்பட்ட அத்தகைய செலவினத்தின் கூட்டு மொத்தம், அத்தகைய கம்பெனியின் தொடக்கப் பகிரங்க முனைவுகையின் பெறுமதியினது ஒரு சதவீதத்தை விஞ்சுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (இ) பந்தியின் (ii) உட்பந்தியில் ''பயணம் செய்வதில் உறப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

"ஏற்பாடு செய்தல்:"

ஆயின், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக-

(அ) (i) ஏதேனும் பொருளின் அல்லது எவையேனும் பண்டங்களின் ஏற்று மதி வியாபாரத்தை மேம்படுத்துதல் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்வதற்காக எவையேனும் சேவைகளின் வழங்குதல் சம்பந்தமாக மட்டுமே உறப்பட்ட அத்தகைய செலவுகள்; அல்லது

(ii) பந்தி (ஈ)இல் குறிப்பீடு செய்யப் பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச் சித்திட்டமொன்றை நிறைவேற்று வதில் உறப்பட்ட அத்தகைய செலவினம்,

அல்லாத, எவரேனும் ஆளினால் இலங்கையில் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்திலிருந்தான அல்லது தொழிலிலிருந்தான இலாபங்களை அல்லது வருமானத்தை உற்பத்தி செய்வதில் இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்வதில் உறப்பட்ட செலவினத்தின் அத்தகைய பாகம் ; அல்லது

(ஆ) நேர்முற்போந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய வியாபாரத்தின் அல்லது தொழிலின் இலாபங்களினதும்

வருமானத்திலும் இரண்டு சதவீதத்துக்குச் சமமானவொரு தொகை,

இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அது, அவ்வரி மதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய வியாபாரத்திலிருந் தான அல்லது தொழிலிலிருந்தான இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிப்பதில் கழிக்கப்படற்பால தாதல் வேண்டும் ;

(2) அவ்வுட்பிரிவின் பந்தி (ண) இன் உட்பந்தி (i) இல் "ஒரு மில்லியன் ரூபா அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு மில்லியன் ரூபா அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ம) என்னும் பந்தியில் "சம்பந்தமாக அவரின் விளம்பரச் செலவினது ஓரரைவாசி;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்:-

"சம்பந்தமாக -

(i) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கு கின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, அத்தகைய ஆளின் விளம்பரச் செலவினது ஓரரைவாசி; அத்துடன்

(ii) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, அத்தகைய ஆளின் விளம்பரச் செலவினது நாலிலொன்று;";

(4) அவ்வுட்பிரிவின் (ல) என்னும் பந்தியில் "நிதிகளின் சேகரிப்பை உள்ளடக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிதிகளின் சேகரிப்பை உள்ளடக்கும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(5) அவ்வுட்பிரிவின் (ல) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(வ) எவரேனும் தொழில்தருநரினால் தொழிலுக்கமர்த் தப்பட்ட எவரேனும் தனியாளின் தொழில் வருமானம் தொடர்பில் அத்தகைய தொழில் தருநரினால் செலுத்தப்பட்ட வருமானவரி;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில்-

(அ) அதன் (எ) என்னும் பந்தியில் "திரளுகின்றது மான வட்டி; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "திரளுகின்றதுமான வட்டி;"என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (ஏ) என்னும் பந்தியில் "இலாபங்களும் வருமானமும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலாபங்களும் வருமானமும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத் துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஐ) 114ஆம் பிரிவின்கீழ் எந்த இலாபங் களிலிருந்து தொழில்தருநரினால் வருமானவரி கழிக்கப்படுகின்றதோ அந்த இலாபங்களாகவுள்ளவையும், அத்தகைய ஆள் தனியாளொருவராகவிருப்பதனால் அத்தகைய தனியாளின் வரிமதிப்பிடற் பாலதான வருமானத்தின் பாகமாக வமைவதில்லையென இப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வருமானம் தவிர்ந்த வேறு வருமானமெதனையும் கொண்டிராத வராகவிருக்கின்றவருக்கு, 4ஆம் பிரிவின்

(1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இலாபங்கள் தவிர்ந்தவையுமான, ஏதேனும் தொழிலி லிருந்தான இலாபங்கள்.";

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(v) மொத்த நியதிச்சட்டமுறையான வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் தொழிலிலிருந்தான வருமானத்திலிருந்து இப்பிரிவின் கீழ் கழிப்பனவெதுவும் செய்யப்படுதலாகாது;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு, அப் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற்பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "மூன்று இலட்சம் ரூபா விடுதொகையொன்று; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் :-

"(i) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் மூன்று இலட்சம் ரூபா விடுதொகை யொன்று; அத்துடன்

(ii) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஐந்து இலட்சம் ரூபா விடுதொகையொன்று;" அத்துடன்

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "கழித்தற்கு உரித்துடையவராதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்:-

"கழித்தற்கு உரித்துடையவராதலாகாது:

ஆயின், மேலும், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டிற்காக -

(i) இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனும் தனியாள், அத்தகைய தனியாள் இலங்கையில் வதிபவராகவோ அல்லராகவோ இருக்கின்றமையைப் பொருட்படுத்தாது, பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடுதொகையைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ; அத்துடன்

(ii) அத்தகைய வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் தொழிலிலிருந்தான வருமானத்திலிருந்து 34 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் விடுதொகையின் ஏதேனும் பாகத்தைக் கழிப்பதற்கு தனியாள் ஒருவர் உரித்துடையவராதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18**. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்–

(அ) அதன் பந்தி (அ) வில் "அங்கீகரிக்கப்பட்ட தருமமொன்றிற்குப் பணமாக எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நோயுற்றோருக்கு அல்லது இலம்பாடுற்றோருக்கு நிறுவனமயமாக்கப்பட்ட பராமரிப்பை வழங்குவதற்காகத் தாபிக்கப்படுகின்ற தரும நிறுவனமொன்றாகவுள்ள அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமொன்றிற்குப் பணமாக எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (ஈ) என்னும் பந்தியில் "உதவுதொகையாக தனியாள் ஒருவரினால் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் உதவு

*தொகையாகத் தனியாள் ஒருவரினால் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;*

(இ) *அதன் (உ) என்னும் பந்தியில் "செலுத்தப்பட்ட அத்தகைய உதவுதொகைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் செலுத்தப்பட்ட ஏதேனும் உதவுதொகை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;*

(ஈ) *அதன் (ஊ) என்னும் பந்தியில் "செய்யப்பட்ட நன்கொடை ஒன்று." என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட நன்கொடை ஒன்று." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;*

(உ) *அதன் (எ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "மருத்துவக் காப்புறுதிப் பத்திரமொன்றின்மீது- என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-*

*"பந்தி (எஎ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் காப்புறுதிப்பத்திரமல்லாத மருத்துவக் காப்புறுதிப் பத்திரமொன்றின்மீது;*

(ஊ) *அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-*

"(எஎ) *ஏதேனும் குணமாக்கமுடியாத நோயை மேவுகின்ற விசேட சுகாதாரக் காப்புறுதிப் பத்திரமொன்றின்மீது கொடுப்பனவுக்கு வருமதியாகத் திரண்டுள்ள கட்டுப்பணங்களாக உள்ளவையும், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்*

தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கானவையுமான எவையேனும் கட்டுப்பணங்கள்;";

(எ) அதன் (ஐ) என்னும் பந்தியில் "உறப்பட்ட ஏதேனும் செலவினம்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஏ) அதன் (ஒ) என்னும் பந்தியில் "உறப்பட்ட ஏதேனும் செலவினம்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், அதன் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில், "பந்திகள் (அ), (ஆ), (இ), (உ), (எ), (ஏ)" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பந்திகள் (அ), (ஆ), (இ), (உ), (எ), (எஎ), (ஏ)" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19**. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்ட வாக்கத்தின் 42ஆம் பிரிவு, அப்பிரிவிற்கான (2) ஆம் உட்பிரிவில் "அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதன்பின்னர், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20**. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக் கத்தின் 45ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், அதன் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"(அஅ) விலங்குத்தீனியை உற்பத்திசெய்வதற்கான பொறுப்புமுயற்சியிலிருந்து;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21**. இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், அதன் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"(அஅ) விலங்குத்தீனியை உற்பத்திசெய்வதற்கான பொறுப்புமுயற்சியிலிருந்து;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டு ஏப்பிரல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**23**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"16ஆம் பிரிவின்கீழ் வரி விலக்களிப்பு முடிவுற்ற பின்னரான வருமான வரியின் வீதம்.

48அ. எவரேனுமாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டதும், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கானதும், 16ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கமத்தொழிற் பொறுப்புமுயற்சியிலிருந்தானதுமான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 59அ மற்றும் 59ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**24**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றனவென்பதுடன், அவை, அச்சட்டவாக்கத்தின் 59அ மற்றும் 59ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“அறுபத்தைந்து சதவீதத்துக்கு மேலான உள்நாட்டுப் பெறுமதிச் சேர்ப்பைக் கொண்டுள்ள குறிப்பிட்ட உற்பத்திப் பொருளின் ஏற்றுமதி யாளருக்கு, ஏற்றுமதியி லிருந்தான அல்லது வழங்கலி லிருந்தான இலாபங்களின் மீதான வருமான வரியின் வீதம்.

59அ. அறுபத்தைந்து சதவீதத்தை விஞ்சுத லான உள்நாட்டுப் பெறுமதிச் சேர்ப்பையும் இலங் கையில் ஆக்கவுரிமைகள் ஒதுக்கப்பட்ட இலங்கை ஆளடையாளப் பெயரையும் கொண்டுள்ள உற்பத் திப்பொருளாகவுள்ள ஏதேனும் உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்வதற்கான அல்லது ஏற்றுமதிக்கான ஏற்றுமதியாளரொருவருக்கு வழங் குவதற்கான பொறுப்புமுயற்சியிலிருந்து எவரேனு மாளுக்கு 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக எழுகின்ற இலாபங் களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்துக் கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட தோதான வீதத்தில் வருமானவரி விதிக்கப் படற்பாலதாதல் வேண்டும்.

முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத வருடாந்த மொத்த விற்பனை வரவுடனான ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையற் பாலதான வருமான வரியின் வீதம்.

59ஆ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலி ருந்து, 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு எவரேனும் ஆளின் இலாபங்களும் வருமானமும், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதே னும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகப் “பொறுப்பு முயற்சி” என்பது,-

(அ) ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதில் ஈடுபட்டுள்ள; அத்துடன்

(ஆ) (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனை தவிர) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய பொறுப்பு முயற்சியின் மொத்த விற்பனை வரவு முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததாகவுள்ள,

ஏதேனும் பொறுப்பு முயற்சி என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**25.** இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இச்சட்டத்துக்கான இரண்டாவது அட்டவணையில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்துக்கேற்ப, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் அல்லது ஐந்தாம் அட்டவணையில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்-

(அ) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில், "அத்தகைய கம்பெனியானது முற்போந்த ஆண்டில் அந்த ஆண்டிற்கான பகிர்ந்தளிக்கப்படக்கூடிய இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறைவான தொகையிலான பங்கிலாபங்களை பகிர்ந்தளித்துள்ளவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்:-

"(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவுள்ளவிடத்தும், அத்தகைய கம்பெனியானது அத்தகைய காலப்பகுதியினுள் முற்போந்த ஆண்டுக்கான பகிர்ந்தளிக்கப்படற்பாலனவான இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறைவான தொகையிலான பங்கிலாபங்களைப் பகிர்ந்தளித்துள்ளவிடத்தும்; அல்லது

(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவுள்ளவிடத்தும், அத்தகைய கம்பெனியானது அத்தகைய காலப்பகுதியினுள் முற்போந்த ஆண்டுக்கான பகிர்ந்தளிக்கப்படற்பாலன வான இலாபங்களின் பத்துசதவீதத்துக்குக் குறைவான தொகையிலான பங்கிலாபங்களைப் பகிர்ந்தளித்துள்ளவிடத்தும்,";

(ஆ) உட்பந்தி (ii)இற்கான காப்புவாசகத்தில் "பகிர்ந்தளிக்கப்படற்பாலதான இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்தைப் பகிர்ந்தளித்துள்ளதா" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்:-

"(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு, 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவிருக்குமிடத்து, அத்தகைய கம்பெனியானது அதன் பகிர்ந்தளிக்கப்படற்பாலனவான இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்தைப் பகிர்ந்தளித்துள்ளதா; அல்லது

(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவிருக்குமிடத்து, அத்தகைய கம்பெனியானது அதன் பகிர்ந் தளிக்கப்படற்பாலனவான இலாபங்களின் பத்துச் சதவீதத்தைப் பகிர்ந்துள்ளதா".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**26**. 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவு அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "பங்குடைமையின் இலாபப் பங்கீட்டு வீதத்தைப் பயன்படுத்தி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'அத்தகைய பங்குடைமையிலிருந்தான ஏதேனும் சம்பளம் உள்ளடங்கலாக பங்குடைமையின் இலாபம் பங்கிடப்பட்ட வீதத்தைப் பயன்படுத்தி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 95ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 95ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (அஅ) என்னும் பந்தியில் "பத்துச் சதவீதப்படியாதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்துச்சத வீதப்படியாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அக்காப்பு வாசகத்தின் (அஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்து வதன் மூலமும் :-

"(அஅஅ) இப்பிரிவின்கீழ், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்கப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது ; அத்துடன்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XI இல் புதிய உப தலைப்பையும் 105அ என்னும் பிரிவையும் உட்புகுத்துதல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XI இல் 105ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உபதலைப்பும் புதிய பிரிவும் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அப்பிரிவானது அச்சட்டவாக்கத் தின் 105அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"க - இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்கள்.

*இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல் களிலிருந்து எழும் இலாபங்களுக் கும் வருமானத்திற் கும் வரியிறுக் கப்படுதல்.*

105.(அ) (1) ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த சாதனம் தொடர்பிலான ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்தெழும் இலாபங்களும் வருமானமும் சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் வரியின் நோக்கங்களுக்கு இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப் பட்டவாறு கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக் கல் வாங்கல்களிலிருந்து எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்கு எழுகின்ற இலாபங்களும் வருமானமும், அத்தகைய கொடுக் கல் வாங்கல் பொருளளவில் சட்டத்தின் ஏற்பாடு களின் கீழ் ஏதேனும் பாரம்பரிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கலை ஒத்திருக்குமிடத்து அல்லது அதற்குச் சமமானதாயிருக்குமிடத்து, அத்தகைய பாரம்பரிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல் சட்டத்தின்கீழ் எவ்வாறு வரியிறுக்கப்படுகின்றதோ அதனையொத்த முறையில் வரியிறுப்பனவுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி ஏதேனும் குறிப்பிட்ட இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல்

வாங்கலின் வரிப் பொறுப்பின் பரப்பெல்லையைத் தீர்மானிப்பதற்கென –

(அ) இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல் ஒன்றாக அமைகின்ற சூழ்நிலைகளை இனங்காணும் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கலிலிருந்து எழுகின்ற இலாபத்தையும் வருமானத்தையும் ஆய்ந்தறியும்,

நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளையும், வழிகாட்டுநெறிகளையும், காலத்திற்குக்காலம் வழங்குதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 106ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**29**. 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 106ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (இ) என்னும் உட்பந்தியில், "அந்தத் தனியாளுக்கு ஏற்புடைத்தாகமாட்டாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்தத் தனியாளுக்கு ஏற்புடைத்தாக மாட்டாது:

ஆயின், மேலும் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு உட்பந்தி (ஆ) அல்லது உட்பந்தி (இ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வருமானத்தைத் தவிர வருமானவரி அறவிடப்படற்பாலதான வேறு ஏதேனும் வருமாத்தைக் கொண்டிராத ஊழியரொருவராக இருக்கும் தனியாள் ஒருவருக்கு முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது." என்னும் சொற்ளையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

‘‘(11) எவரேனும் ஆள் அல்லது பங்குடைமை பல்வேறு அலகுகளில் அல்லது பொறுப்பு முயற்சிகளில் ஏதேனும் வியாபரத்தை, வர்த்தகத்தை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலை, விடயத்திற்கேற்ப ஒரு வியாபாரமாக, வர்த்தகமாக, உயர் தொழிலாக அல்லது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு நடாத்துமிடத்தும் அல்லது பிரயோகிக்குமிடத்தும் அல்லது அத்தகைய ஆள் அல்லது பங்காண்மை ஒன்றுக்கு மேற்பட்ட வியாபாரத்தை, வர்த்தகத்தை, உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துமிடத்தும் அல்லது பிரயோகிக்குமிடத்தும் அத்தகைய கூறுகளிலிருந்து அல்லது பொறுப்புமுயற்சிகளிலிருந்து அல்லது அத்தகைய வியாபாரத்திலிருந்து, வர்த்தகத்திலிருந்து, உயர் தொழிலிருந்து அல்லது வாழ்க்கைத் தொழிலிருந்தெழும் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவிடத்தும் அல்லது வெவ்வேறு வீதங்களில் வருமானவரி அறவிடப்படற்பாலதானதாக இருக்குமிடத்தும் அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை விடயத்திற்கேற்ப, அத்தகைய கூறில் அல்லது பொறுப்புமுயற்சியில், வியாபாரத்தில், வர்த்தகத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்தெழும் இலாபங்களும் வருமானமும் புறம்பாக இனங்காணப்படக்கூடியவாறான முறையொன்றில் கணக்குக் கூற்றுக்களைப் பேணுதலும் தயாரித்தலும் வேண்டும்.”; அத்துடன்

(3) அப்பிரிவின் (18)ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(19) ஆணையாளர் தலைமையதிபதி, எவரேனும் தனியாளின் எல்லா இலாபங்களும் வருமானமும் எந்த மூலங்களிலிருந்து அத்தகைய தனியாளின் வரிகள் செலுத்தப்படுகின்றனவோ அத்தகைய மூலத்திலிருந்து மாத்திரமே பெறப்படுகின்றன எனவும், அத்தகைய

வரிகள் இறுதியானவையாகக் கருதப்படுகின்றன எனவும் அத்தகைய தனியாளினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது அவர் திருப்தியுறுவாராயின், அவரால் பேணப்படுவதும் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதி யன்று அல்லது அதன்பின்னர் உளதாயிருப்பதுமான அத்தகைய தனியாளின் ஏதேனும் பதிவேட்டை மூடிவிட லாம்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 117ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 117ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் ''நியதிகளில் அத்தகைய தொகைகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் பத்து சதவீதத்தில் வரியைக் கழித்தல் வேண்டும்.''என்னும் சொற்களுக் குப் பதிலாக, பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''நியதிகளின்படி அத்தகைய தொகைகளின் அல்லது அத்தகைய நன்மைகளின்மீது பெறுமதியின்மீது-

(அ) அத்தகைய தொகைகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டுமொத்தம் மாதமொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத விடத்து, பத்து சதவீதப்படியும் ; அல்லது

(ஆ) அத்தகைய தொகைகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டுமொத்தம் மாதமொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து, பதினாறு சத வீதப்படியும்,

வரியைக் கழித்தல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 117அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 117ஆம் பிரிவை உடனடுத் துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 117அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*''தனியாள் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் களைக் கொண்டி*

117அ. (1) தொழில்தருநர் ஒருவர் இன்னொரு தொழில்தருநரின் ஊழியர் ஒருவராகவுமிருக்கின்ற எவரேனும் ஊழியருக்கு ஏதேனும் வேதனத்தைச் செலுத்துமிடத்தும் அல்லது ஏதேனும் நன்மையை வழங்குமிடத்தும் அத்துடன் அத்தகைய வேறு தொழில்தருநர் அத்தகைய ஊழியரின் பிரதான

ருக்குமிடத்து விசேட வீதங்களில் வரியைக் கழிப்பனவு செய்தல்.

தொழில்தருநராக 114 ஆம் பிரிவின்கீழ் ஊதியத்தின்மீது வருமானவரியைக் கழிக்குமிடத்தும், அப்போது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய தொழில்தருநர் –

(அ) அத்தகைய கொடுப்பனவுகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டுமொத்தம் மாதமொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து, பத்து சத வீதப்படி; அல்லது

(ஆ) அத்தகைய கொடுப்பனவின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டு மொத்தம் மாதமொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து, பதினாறு சத வீதப்படி,

இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய கொடுப்பனவின்மீது அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின்மீது வரியைக் கழிப்பனவு செய்தல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதி தொடர்பில் 118ஆம் பிரிவின்கீழ் பணிப்புரை எதுவும் வழங்கப்படுதலோ அல்லது கருத்திற் கொள்ளப்படுதலோ ஆகாது.

(2) இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் (1)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கழிப்பனவு செய்யப்பட்ட வருமானவரி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் மீளளிப்பு எதுவும் செய்யப்படுதலாகாது. ஆனால், அத்தகைய கொடுப்பனவுகள் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதி அந்த ஆண்டிற்கான அவரது மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பின், அத்தகைய வருமானவரி அதே வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் அத்தகைய ஆளின் வருமானவரிப் பொறுப்புக்கெதிராக எதிரீடு செய்யப்படலாம்.

*(3)* ஏதேனும் ஊதியத்தின்மீது 116ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான வரிப்பட்டோலைகளைப் பயன்படுத்தி வரியைக் கழிப்பனவு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் தொழில்தருநர் அவ்வாறு செய்யாது விடுமிடத்தும் அத்துடன் அத்தகைய ஊதியத்தின் மீது பத்து சத வீதப்படி வரியை கழிப்பனவு செய்யுமிடத்தும் அத்தகைய தொழில்தருநர் 116ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான வரிஅட்டவணையின் அடிப்படையில் செலுத்தப்படற்பாலதான வரிக்கும் இப்பிரிவின்கீழ் தொழில்தருநரால் கழிப்பனவு செய்யப்பட்ட வரிக்கும் இடையிலான வித்தியாசத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட தவணை தவறுகையிலுள்ள அத்தகைய வரியைச் செலுத்துவதற்காளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 118ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவு, அப்பிரிவுக்கான (1) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களில் தொடங்கி "கழிக்கப்பட்டிருப்பின்," என்னும் சொல் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "அத்தகைய ஊதியமானது, முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின்கீழ் வருமானவரியிலிருந்து ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக விலக்களிக்கப்பட்டிருப்பின்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 131ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**33.** 2008ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 131ஆம் பிரிவு ''தொழில் தருநர்'' என்னும் பதத்திற்கான வரைவிலக்கணத்தில் ''அத்தியாயம் XV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அரசாங்க நிறுவனம் அல்லாத ஆட்கள் குழுவினை அல்லது ஏதேனும் நிறுவகத்தை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஆட்களின் குழுவினை அல்லது ஏதேனும் நிறுவனத்தை'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "அந்த எவரேனும் ஊழியரால் 2008, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அந்த எவரேனும் ஊழியரால் 2008, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்குச்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**35.** 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 133ஆம் பிரிவு அதன் (4)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்–

"(அ) (i) ஏதேனும் தரும நிறுவனமல்லாத ஏதேனும் கம்பெனியாக இருக்குமிடத்து கழிப்பனவானது, அத்தகைய வட்டியின் பத்து சதவீதம் என்ற வீதத்தில் செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஏதேனும் தரும நிறுவனமல்லாத ஏதேனும் பங்குடைமையாக அல்லது ஆட்கள் குழுவாக இருக்குமிடத்து கழிப்பனவானது , அத்தகைய வட்டியின் எட்டு சதவீதம் என்ற வீதத்தில் செய்யப்படுதல் வேண்டும் ;";

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்,

(அ) அதன் (i) ஆம் உட்பந்தியில் "300,000 ரூபாவை விஞ்சுவதில்லையென" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "500,000 ரூபாவை விஞ்சுவதில்லையென" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (ii)ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ii) 500,000 ரூபாவை விஞ்சுகின்றதென எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றை அளிக்கின்ற ஏதேனும் தரும நிறுவனமாக இருக்குமிடத்து, தரும நிறுவனங்களுக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து அந்த வரிமதிப்பீட்டிற்காக அத்தகைய வட்டியின் எட்டு சத வீதப்படி கழிவுப்பனவு செய்யப் படுதல் வேண்டும்;";

(3) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், -

(அ) அதற்கான (i)ஆம் உட்பந்தியில் "300,000 ரூபாவை விஞ்சுவதில்லையென" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "500,000 ரூபாவை விஞ்சுவதில்லையென" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அதற்கான (ii)ஆம் உட்பந்தியில் "300,000 ரூபாவை விஞ்சுகின்றதும் ஆனால் 1,000,000 ரூபாவை விஞ்சவில்லையெனவும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "500,000 ரூபாவை விஞ்சுகின்றதும் ஆனால் 1,500,000 ரூபாவை விஞ்சவில்லையெனவும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அதற்கான (iii)ஆம் உட்பந்தியில் "1,000,000 ரூபாவை விஞ்சுகின்றதென" மற்றும் "பத்து சத வீதம் என்ற வீதத்தில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, முறையே "1,500,000 ரூபாவை விஞ்சுகின்றதென" மற்றும் "எட்டு சதவீதம் என்ற வீதத்தில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அத்தகைய வட்டியின் பத்து சத வீதம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வட்டியின் எட்டு சதவீதம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 135ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**36.** 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 135ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "வருமான வரியைக் கழித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "வருமான வரியைக் கழித்தல் வேண்டும். அத்தகைய கழிப்பனவானது அத்தகைய கூட்டிணைப்புத் தனிசுப் பிணையம் வழங்கப்படும் நேரத்தில் செய்யப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 151ஆம் பிரிவை நீக்கம் செய்தல்.*

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 151ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 153ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**38.** 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 153ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "கொடுபடற்பாலதான அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்திலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுபடற்பாலதானதும் 2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் செலுத்தப்பட்டதுமான அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்திலிருந்து" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 155ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**39.** 2008ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 155ஆம் பிரிவு" ஏதேனும் வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவைச் செலுத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவைச் செலுத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 160ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**40.** 2008ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 160ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (ஆ) என்பதில் ''ஏதேனும் முகாமைத்துவக் கட்டணம் அல்லது வேறு அதனையொத்த கொடுப் பனவுகளைச்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் முகாமைத்துவக் கட்டணத்தைச்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) ''அரசுரிமைப்பணம், முகாமைக் கட்டணம் அல்லது அதனையொத்த வேறு கொடுப்பனவுகளின்" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "அரசுரிமைப்பணம் அல்லது முகாமைக்கட்டணத்தின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) விடயம் (ii) இல் "செலுத்தப்பட்ட ஏதேனும் முகாமைக் கட்டணம் அல்லது செய்யப்பட்ட வேறு ஏதேனும் அதுபோன்ற கொடுப்பனவுகளின்" என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, "செலுத்தப்பட்ட முகாமைக் கட்டணத் தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**41.** 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவு (5)ஆம் உட்பிரிவில் இத்தால் மேலும் திருத்தப் படுகின்றது:-

(1) பந்தி (அ) என்பதில் ''அவ்வரிமதிப்பீட்டாண்டு முடிவடைந்ததிலிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''உடனடுத்துப் பின்னுறும் வரிமதிப்பீட் டாண்டின் நவம்பர் முப்பதாம் தேதியிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) பந்தி (ஆ) என்பதில் "அந்த இயைபான வரிமதிப்பீட் டாண்டிலிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் வரிமதிப்பீட்டாண்டின் நவம்பர் முப்பதாம் தேதியிலிருந்து'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 166ஆம் பிரிவைத் திருத்துதல்.

**42**. 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 166ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேன்முறையீடுகளை விசாரிக்கும் நோக்கத்திற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் 2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட மேன்முறையீடுகளை விசாரிக்கும் நோக்கத்திற்காக". என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 167ஆம் பிரிவைத் திருத்துதல்.

**43**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 167ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "ஆணையாளர் தலைமையதிபதி (2)ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானித்ததற்கான காரணங்களை அறிவித்த ஒரு மாத காலத்துக்குள்ளாக சபைக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட எழுத்திலான மனு மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணையாளர் தலைமையதிபதி (2)ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானித்ததற்கான காரணங்களை அறிவித்த ஒரு மாத காலத்துக்குள் ஆனால் 2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்குப் பிந்தாமல் சபைக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட எழுத்திலான மனு மூலம்' ' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 168ஆம் பிரிவைத் திருத்துதல்.

**44**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 168ஆம் பிரிவு "மீளாய்வுச் சபைக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் "மீளாய்வுச் சபைக்கு" என்னும் சொற் களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 170ஆம் பிரிவைத் திருத்துதல்.

**45**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 170ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் (2)ஆம் (3)ஆம் (5)ஆம் (6)ஆம் (7)ஆம் (9)ஆம் உட்பிரிவுகளில் "சபை" என்னும் சொல்

காணப்படும் இடங்களிலெல்லாம் விடயத்திற்கேற்ப "சபை அல்லது வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (7)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்.

"(7அ) மேன்முறையீட்டு நீதிமன்றம் (7)ஆம் உட்பிரிவின்கீழ் இடைக் காலத் தீர்மானமொன்றைச் செய்யுமிடத்து மேன்முறையீட்டின் இறுதித் தீர்மானம் முடிவுறாதிருக்கையில் பிணக்கிலுள்ள முழு வரியும் அல்லது அதன் பாகம் நீதிமன்றம் நியாயமானது எனக் கருதுகின்றவாறான முறையொன்றில் செலுத்தப்படவேண்டுமென நீதிமன்றம் கட்டளையை ஆக்கலாம்.

மேன்முறையீட்டின்மீது நீதிமன்றத்தால் செய்யப்படும் இறுதித் தீர்மானத்தின் விளைவொன்றாக எழும் வரியின் ஏதேனும் மிகைக் கொடுப்பனவு மேன்முறையீட்டாளருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 177அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 177ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 177அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:–

*"முதன்மை அலுவலர்களிடமிருந்தும் ஏனையோரிடமிருந்தும் வரியை அறவிடுதல்.*

177அ. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று 113ஆம் பிரிவின்கீழ்த் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிய தேதியன்று அல்லது அதற்குமுன்னர் வரி எதனையும் செலுத்தியிராதவிடத்து அத்தகைய குழு தொடர்பிலான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப அத்தகைய குழுவின் முகாமை

*யாளர், பணிப்பாளர் அல்லது முதன்மை அலுவலர் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தி யுறும் விதத்தில் முரணாக எண்பித்தாலன்றி, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமையாளருக்கு, செயலாளருக்கு அல்லது வேறு எவரேனும் முதன்மை அலுவலருக்கு எதிராக, விடயத்திற்கேற்ப அத்தகைய முகாமையாளர், செயலாளர், பணிப்பாளர் அல்லது முதன்மை அலுவலர் அத்தகைய தவணை தவறுகைக்குப் பொறுப்பானவர் என்றாற் போன்று இச் சட்டத்தின் எல்லா அல்லது எவையேனும் ஏற்பாடு களின் கீழ் சட்ட நடவடிக்கை எடுத்தல் ஆணை யாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும்.*

*(2) கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழுவொன்று 113ஆம் பிரிவின்கீழ்த் தேவைப் படுத்தப்பட்டவாறு உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வரி எதனையும் செலுத்தியிராத விடத்து வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், விடயத்திற் கேற்ப அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழுவின் எவரேனும் பங்காளர் அல்லது பதவி தாங்குநர் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் முரணாக எண்பித்தா லன்றி, அத்தகைய தவணைதவறுகைக்கு அத்தகைய பங்காளர் அல்லது பதவிதாங்குநர் பொறுப்புடையவராவார் என்றாற்போன்று அத்தகைய பங்காளருக்கு அல்லது பதவி தாங்குநருக்கு எதிராக இச்சட்டத்தின் எல்லா அல்லது எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுத்தல் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 200 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**47**. 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 200ஆம் பிரிவு அப்பிரிவின் (8)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"(9) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எவரேனும் ஆளுக்கு எழும் ஏதேனும் மீளளிப்பு அத்தகைய ஆளின் வங்கிக்கணக்கொன்றில் நேரடியாக வரவு வைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 204அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**48**. முதன்மைச் சட்டவாக்கத்தில் 204ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 204அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:-

"சட்டத்தின் ஏற்பாடுகள் கணக்காய்வாளர்களாலும் வரித் தொழிலர்களாலும் பிறழ் பொருட்கோடல் செய்யப்படுதல் தொடர்பிலான தண்டனை ஏற்பாடு.

204அ. தமது உயர் தொழில்சார் கடமையை நிறைவேற்றுகையில் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின், விதியின் அல்லது கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை பிறழ் பொருள் கோடல் செய்யும் எவரேனும் கணக்காய் வாளர் அல்லது வரித் தொழிலர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங் களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**49.** 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 217ஆம் பிரிவு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) தரும நோக்கம் என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தில் –

(அ) (ஆ) என்னும் பந்தியில் ''கல்வியை அல்லது அறிவை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தொழில் நோக்கங்களுக்குத் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது கம்பெனிகள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தால் தவிர கல்வியை அல்லது அறிவை'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (ஆ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

''(ஆஆ) சூழலின் பாதுகாப்பிற்கான செயற் பாடுகள் அல்லது உயிரியல் வாழ்க் கைச் சூழலுக்கு இதமான செயற்பாடு கள்.";

(2) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு" என்பது 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக் குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு எனப் பொருள்படும்;.

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**50.** 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்ட வாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் பாகம் Iஅ என்பதில் ''அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு பாகம் II அல்லது பாகம் III என்பதில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதன் பின்னர் தொடங்கும், ஆனால் 2011, மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு, பாகம் II அல்லது பாகம் III என்பதில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் பாகம் Iஅ என்பதனை உடனடுத் துப் பின்வரும் புதிய பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"பாகம் Iஆ

**2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு பாகம் II அல்லது பாகம் III என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட தனியாளொருவரைத் தவிர்ந்த வேறு எவரேனும் தனியாள் -**

| | |
|---|---|
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் முதல் 500,000 ரூபா மீது | 4 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 500,000 ரூபா மீது | 8 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 500,000 ரூபா மீது | 12 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 500,000 ரூபா மீது | 16 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 1,000,000 ரூபா மீது | 20 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீதியின் மீது | 24 சதவீதம்.". |

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான இரண்டாம் அட்டவணை யைத் திருத்துதல்.

51. 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் பாகம் அ என்பதில் அப்பாகத்தின் விடயம் 1 இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"1. ஏதேனும் தொழில் முயற்சி மூலதனக் கம்பெனி-

| | | |
|---|---|---|
| (அ) | 2006 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னராக தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு - வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது | 20 சதவீதம் |
| (ஆ) | 2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது | 12 சதவீதம்". |

(2) அவ்வட்டவணையின் பாகம் ஆ என்பதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன்மூலமும்:-

### "பாகம் ஆ

1. (அ) 2006 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டிற்கு பாகம் அ என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்றைத் தவிர்ந்த 5,000,000 ரூபாவை விஞ்சாத வரி விதிக்கப்படற்பாலதான வருமானமுடைய ஏதேனும் கம்பெனி — 15 சதவீதம்

(ஆ) 2007 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னராக, தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் கம்பெனி -

(அ) (i) அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ ;

(ii) பாகம் அ என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்றாக இல்லாதிருக்கின்றதோ ; அத்துடன்

(ஆ) ஒரு கம்பெனித் தொகுதியின் கொளீக் கம்பெனியாக, ஒரு துணை நிலைக் கம்பெனியாக அல்லது ஒரு இணைக் கம்பெனியாக இல்லாதிருக்கின்றதோ அந்தக் கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது — 15 சதவீதம்

(இ) 2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு -

(அ) (i) அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ ;

(ii) பாகம் - அ என்பதில் குறிப்பீடுசெய்யப் பட்ட கம்பெனியொன்றாக இல்லாதிருக் கின்றதோ; அத்துடன்

(ஆ) கம்பெனித் தொகுதியொன்றின் கொளீக் கம்பெனியாக, துணைநிலைக் கம்பெனியாக அல்லது ஒரு இணைக் கம்பெனியாக இல்லாதிருக்கின்றதோ,

அந்த ஏதேனும் கம்பெனியின் வரிவிதிக்கப் படற்பாலதான வருமானத்தின் 12 சதவீதம்

பந்தி (ஆ) மற்றும் பந்தி (இ) என்பவற்றின் விடயம் (ஆ) என்பதன் நோக்கத்திற்கு கொளீக் கம்பெனி, துணைநிலைக் கம்பெனி கம்பெனித்தொகுதி என்னும் சொல் லமைப்புக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அந்தந்த சொல்லமைப்புகள் கொண்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. 2011 ஏப்பிறில் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவிருக்கின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்தக் கம்பெனியின் பங்குகள் முதலில் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக் கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன் றினால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் முதலில் விலைகோரிப் பெறப் பட்டுள்ளனவோ- அந்த ஏதேனும் கம்பனி

முதலாவது வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து வரும் நான்கு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக் குட்பட்ட ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்-

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சுகின்றதோ; அல்லது

(ஆ) அத்தகைய கம்பனி கொளீக் கம்பெனியொன்றாக, துணைநிலைக் கம்பெனியொன்றாக அல்லது கம்பனிகள் தொகுதியொன்றின் இணைக் கம்பெனியொன்றாக இருப்பின்,

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது 33 1/3 சதவீதப்படி

ஆயினும், அத்தகைய முதலாவது வரிமதிப்பீட்டாண்டு 2006 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, 33 1/3 சதவீதமானது நான்கு ஆண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப்பகுதிக்குள் வரும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இந்த அட்டவணையில் இதனகத்து முன்னர் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பனியைத் தவிர்ந்த ஏதேனும் கம்பெனி, வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மீது-

(அ) 2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு- 35 சதவீதம்

(ஆ) 2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு- 28 சதவீதம்

*4.* ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் கம்பெனியின் வரிவிதிக்கற் பாலதான வருமானம் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து அப்போது, அத்தகைய மிகைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வாறு அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கம்பெனியால் செலுத்தப்படற்பாலதாகின்றவாறான இச்சட்டத்திற்கிணங்கக் கணிப்பிடப்பட்ட வரியின் அத்தகைய பாகம் அத்தகைய மிகையை விடக் கூடுதலானதாக இருத்தலாகாது.

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான மூன்றாம் அட்டவணை யைத் திருத்துதல்.

**52.** 2008ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசி யாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாவது அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அத்தகைய அட்டவணையின் 7ஆம் விடயத்தில், "2008 மார்ச்சு 31இல் அல்லது அதற்குமுன்னர் முடிவடையும் ஏதேனும் ஆண்டிற்கான அல்லது 2013 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வரி விதிக்கற்பாலதான வருமானத்தின்மீது 5 சதவீதம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2008 மார்ச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வரி விதிக்கப்படற்பாலதான வருமானத் தின்மீது 5 சதவீதம்."

என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 8ஆம் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"8. பிரிவு 101 என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் களரி அல்லது கழகம்,

(அ) 2011 ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது - 20 சதவீதம்

| | | |
|---|---|---|
| (ஆ) | 2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது | 10 சதவீதம்.". |

**53.** 2008ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.

(1) அவ்வட்டவணையின் 5ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

| | | |
|---|---|---|
| "5. | ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறின் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம்மீது - | |
| (அ) | 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 20 சதவீதம் |
| (ஆ) | 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | இரண்டாம் அட்டவணையின்கீழ் தோதான வீதம்." |

(பிரிவு 41)

(2) அவ்வட்டவணையின் 6ஆம் விடயத்தில் "எழுகின்ற இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் எழுகின்ற இலாபங்களும் வருமானமும் என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(3) அவ்வட்டவணையின் 8ஆம் விடயத்தில் "கையுதிர்ப்பதன்மீது எவையேனும் விடயங்கள் அல்லது ஈட்டுதல்களுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2007, மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கையுதிர்ப்பதன்மீது எவையேனும் இலாபங்களுக்கு அல்லது ஈட்டுதல்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அவ்வட்டவணையின் 9ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"9. கம்பனியொன்றைத் தவிர்ந்த, ஆளொருவரினால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்புமுயற்சியிலிருந்தான இலாபங்கள்மீது -

| | |
|---|---|
| (அ) 45ஆம் பிரிவில் அல்லது 217ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கமத்தொழில், உல்லாசப்பிரயாணம் மேம்படுத்துகை அல்லது நிர்மாண வேலை என்பவற்றில் ஈடுபட்டுள்ள பொறுப்பு முயற்சியிலிருந்து 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கான இலாபங்களாகவிருக்கும் இலாபங்கள் மீது வருமானவரி வீதம் | ஆகக்கூடியது 12 சத வீதத்திற்கமைவாக முதலாம் அட்டவணையின் படி. |
| (ஆ) 45ஆம் பிரிவில் அல்லது 217ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கமத்தொழில், விலங்குத்தீனி உற்பத்தி, உல்லாசப் | ஆகக்கூடியது 12 சத வீதத்திற்கமைவாக முதலாம் அட்டவணையின் படி. |

*பிரயாண மேம்படுத்துகை அல்லது நிர்மாண வேலையில் ஈடுபட்டுள்ள பொறுப்பு முயற்சியிலிருந்து 2011, ஏப்பிறல் 1ஆம் தேதி யன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான இலாபங்களாகவிருக்கும் இலாபங்கள் மீது 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு வருமானவரி வீதம்"*

*(பிரிவு 45)*

(5.) *அவ்வட்டவணையின் 10ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-*

"10. *கம்பெனியொன்றினால்கொண்டு நடாத்தப்படும் பொறுப்பு முயற்சியிலிருந்தான இலாபங்கள்மீது -*

(அ) *46ஆம் பிரிவில் அல்லது 217ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கமத்தொழில், உல்லாசப் பிரயாண மேம்படுத்துகை அல்லது நிர்மாண வேலையில் ஈடுபட்டுள்ள பொறுப்பு முயற்சியொன்றிலிருந்து 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான இலாபங்களாகவிருக்கும் இலாபங்கள்மீது வருமானவரி வீதம்* — *15 சதவீதம்*

| | |
|---|---|
| ஆ. 46ஆம் பிரிவில் அல்லது 217ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கமத்தொழில், விலங்குத்தீனி உற்பத்தி, உல்லாசப்பிரயாண மேம்படுத்துகை அல்லது நிர்மாண வேலையில் ஈடுபட்டுள்ள பொறுப்பு முயற்சியொன்றிலிருந்து 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இலாபங்களாக இருக்கும் இலாபங்கள்மீது 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வருமான வரி வீதம் | 12 சதவீதம்"; |

(பிரிவு 46)

(6.) அவ்வட்டவணையின் 11ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"11. விசேட வீடமைப்பு வங்கிகளுக்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதம் -

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 20 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு | இரண்டாம் அட்டவணையின் கீழ் தோதான வீதம்." |

(பிரிவு 47)

(7) அவ்வட்டவணையின் 14ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

| | | |
|---|---|---|
| "14அ. | 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு சட்டத்தின் 16ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியின் இலாபங்களினதும் வருமானத்தினதும்மீது வருமான வரி வீதம் | முதலாம் அட்டவணையின்படி ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 10 சதவீதத்திற்கும் கம்பனி ஒன்றுக்கு 10 சதவீதத்திற்கும் அமைவாக.''; |
| | (பிரிவு 48அ) | |

(8) அவ்வட்டவணையின் 16ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"16. கம்பெனியொன்றல்லாதவரும் 2014, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்தத் தொடங்கியவருமான ஆளொருவரின் தகைமைபெற்ற ஏற்றுமதி இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமான வரி வீதம் -

| | | |
|---|---|---|
| (அ) | 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | ஆகக்கூடியது 15 சதவீதத்திற்கமைவாக முதலாம் அட்டவணையின்படி. |
| (ஆ) | 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கமைவாக முதலாம் அட்டவணையின்படி.''; |
| | (பிரிவு 50) | |

(9) அவ்வட்டவணையின் 17ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

| | |
|---|---|
| "17. 2014, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் குறித்துரைக் கப்பட்ட பொறுப்பு முயற்சி யைக் கொண்டு நடாத்தத் தொடங்கிய கம்பனியொன் றின் தகைமைபெற்ற ஏற்று மதி இலாபங்கள் மற்றும் வருமானம் மீது வருமானவரி வீதம்:- | |
| (அ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங் கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு | 15 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதே னும் வரிமதிப்பீட்டாண் டிற்கு | 12 சதவீதம்.". |

(பிரிவு 51)

(10) அவ்வட்டவணையின் 18ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

| | |
|---|---|
| "18. 2015, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புமுயற்சி யைக் கொண்டுநடாத்தும் கம்பெனியொன்றின் தகைமை பெற்ற ஏற்றுமதி இலாபங் கள் மற்றும் வருமானம்மீது வருமானவரி வீதம்:- | |
| (அ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங் கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு | 15 சதவீதம் |

| | |
|---|---|
| (ஆ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 12 சதவீதம்'' ; |

(பிரிவு 52)

(11) அவ்வட்டவணையின் 20ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"20. எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் கருதப்பட்ட ஏற்றுமதிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீது வருமானவரி வீதம் -

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | முதலாம் அட்டவணையின்படி ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது பதினைந்து சதவீதத்திற்கும் கம்பனியொன்றுக்கு ஆகக்கூடியது பதினைந்து சதவீதத்திற்கும் அமைவாக. |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு | முதலாம் அட்டவணையின்படி ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கும் கம்பனியொன்றுக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கும் அமைவாக.'' |

(பிரிவு 56)

(12) அவ்வட்டவணையின் 24ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"24. செய்யப்பட்ட ஏதேனும் வரி மதிப்பீட்டின்மீது தவிர்ந்த பிரிக்கப்படற்பாலதான இலாபங்கள் மற்றும் வருமானத்தின்மீது ஏதேனும் பங்காண்மைக்கு ஏற்புடைத்தான வருமான வரிவீதம் -

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 10 சதவீதம் |
| (ஆ) 2011 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 8 சதவீதம்"; |

(பிரிவு 78)

(13) அவ்வட்டவணையின் 25ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"25. களியாட்டக்காரராக அல்லது கலைஞர் என்ற உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற இலங்கைப்

பிரசையல்லாத எவரேனுமா ளுக்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதம் -

(அ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங் கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு 15 சதவீதம்

(ஆ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங் கும் ஏதேனும் வரி மதிப் பீட்டாண்டிற்கு 12 சதவீதம்.";

(பிரிவு 96)

(14) அவ்வட்டவணையின் 26ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"26. எவரேனும் ஆளின் பெற்றோ லியத்தை தேடிக்கண்டறிதலிலி ருந்து அல்லது பங்காண்மை யொன்றின் விடயத்தில் பங்காளியொருவரின் 105ஆம் பிரி வில் குறிப்பீடுசெய்யப்பட்ட வாறான எவையேனும் இலா பங்களுக்கும் வருமானங்களுக் கும் ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் -

(அ) 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங் கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு 15 சதவீதம்

(ஆ) *2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு* — *12 சதவீதம்.*";

(பிரிவு 105)

(15) அவ்வட்டவணையின் 27ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"27. அரசசார்பற்ற தாபிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிதியத்தின் அல்லது பெறப்பட்ட நிதிகளின் பெறுகையிலிருந்தான இலாபங்களுக்கு ஏற்புடையற்பாலனவான வருமானவரி வீதம்-

(அ) *2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு* — *30 சதவீதம்*

(ஆ) *2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு* — *28 சதவீதம்.*";

(பிரிவு 102)

(16) அவ்வட்டவணையின் 28ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும்:-

| | | |
|---|---|---|
| "29. | ஏதேனும் மதுபான அல்லது புகையிலை உற்பத்திப் பொருளின் உற்பத்தியிலும் விற்பனையிலுமிருந்தான அல்லது இறக்குமதியிலும் விற்பனையிலுமிருந்தான இலாபங்களை அல்லது வருமானத்தைக் கொண்டிருக்கின்றவாறான, எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் வரிவிதிக்கப்பற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடைத்தான வருமானவரி வீதம் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 40 சதவீதம் |
| 30. | பிரிவு 59அ என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளின் இலாபங்களின் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடைத்தான வருமானவரி வீதம் | முதலாம் அட்டவணையின் படி ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 10 சதவீதமும், கம்பனியொன்றுக்கு ஆகக்கூடியது 10 சதவீதமும் என்பதற்கமைவாக. |
| 31. | களஞ்சியப்படுத்துகை, மென்பொருள் அபிவிருத்தி அல்லது தொழிலாளர் வழங்கல் என்பவற்றிற்கான வசதிகளின் | முதலாம் அட்டவணையின் படி ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது |

| | | |
|---|---|---|
| | தொழிற்பாட்டிற்கும் பேண லுக்கும் இலங்கையில் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் பொறுப்புமுயற்சியிலிருந்தான இலாபங்கள் மற்றும் வரு மானத்திற்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதம் | 10 சதவீதம், கம்பெனி யொன்றுக்கு ஆகக்கூடியது 10 சதவீதமும் என்பதற் கமைவாக. |
| 32. | கல்விச் சேவைகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் வரு மானத்திற்கு ஏற்புடைத்தான வருமானவரி வீதம் | முதலாம் அட்ட வணையின் படி ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 10 சதவீதமும், கம்பெனி யொன்றுக்கு ஆகக்கூடியது 10 சதவீதமும் என்பதற் கமைவாக. |
| 33. | கொள்வனவு மற்றும் விற் பனைச் செயற்பாடுகளைத் தவிர்ந்த முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத ஆண்டு மொத்த விற்பனை வரவை யுடைய ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதம் | 10 சதவீதம்.”; |

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 208அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**54.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 208ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 208அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:-

"சட்டவாக்கத்தின் ஏற்பாடு களுக்குப் பொருள் கோடல் செய்வதற்கும் விதிமுறைகளை வழங்குவதற்கு மான குழு.

208அ. ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அவரால் நிர்வகிக்கப்படும் எல்லாச் சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்குப் பொருள்கோடல் செய்வதற்குப் பணிப்பாணை வழங்கப்பெற வேண்டியவர்களான உண்ணாட்டர சிறைத் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர் களைக் கொண்ட குழுவொன்றை நியமித்தல் வேண்டும். அத்தகைய குழு அத்தகைய பணிப் பாணையின்படி அத்தகைய பொருள்கோடல் தொடர்பில் ஒரே சீரான தன்மையை உறுதிப்படுத் துவதற்கு தேவைப்படுத்தப்படக்கூடியவாறான எல்லா அவசியமான வழிகாட்டுநெறிகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்குதல் வேண்டும்.".

குறித்தசில சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளால் செலுத்தப்படற்பால தான வரியிலிருந்து விலக்களிப்பு.

**55.** நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகை யிலான ஆண்டு மொத்த விற்பனை வரவை உடைய தொழில்முயற்சியொன்றைக் கொண்டுநடாத்துகின்றவரும் அல்லது கொண்டுநடாத்துகின்றதும், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகவுள்ளவரும் அல்லது ஆளாகவுள்ளதும், பொதுவாக ஏதேனும் போர்ச்சூழல் உள்ளமை காரணமாக, அல்லது அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் நிதிநெருக்கடிகள் காரணமாக, 2010, மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் அத்தகைய சட்டத்தின்கீழ் அவரி னால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வரியைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளவரும் அல்லது தவணைதவறியுள்ளதுமான எவரேனுமாள் அல்லது பங்குடைமை அத்தகைய சட்டத்தின்கீழ் தவணை தவறப்பட்ட வாறான அத்தகைய வரியைச் செலுத்துவதிலிருந்து விலக் களிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், உண்ணாட்டரசிறை ஆணையாளர், அதற்கென செய்யப்பட்ட வேண்டுகோளின்மீது, தவணைதவறப்பட்ட வரி தொடர்பில் விலக்களிப்புச் சான்றிதழொன்றை அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்குதல் வேண்டும்.

ஆயின், மேலும், விலக்களிப்புச் சான்றிதழ் எவ்வாளுக்கு அல்லது எப்பங்குடைமைக்கு வழங்கப்படுகின்றதோ அவ்வாள் அல்லது அப்பங்குடைமை, 2010, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில், அத்தகைய சட்டத்தின் கீழ் அவரினால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதாக வரக்கூடிய எல்லாப் பணத்தொகைகளினதும் கொடுப்பனவுக்கு அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை பொறுப்பாகவிருப்பார் அல்லது பொறுப்பாகவிருக்கும் என்ற பொருள்பட எழுத்திலான உறுதிப்பாடொன்றை அதேநேரத்தில் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு கொடுத்தல் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**56**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்குவந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின் -

(அ) இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2008, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் பிரிவு 10, பிரிவு 11 மற்றும் பிரிவு 12 என்பவற்றால் முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 20, 21 மற்றும் 21அ என்னும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2009, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**57**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்